# எல்லாமே பதவி படுத்தும் பாடு!

**“புலியை முறத்தால் அடித்து ஓட்டியப் பரம்பரையைச் சேர்ந்த என்னை யாரும் உருட்டவோ, மிரட்டவோ முடியாது.”**

**“மூக்கையும் நுழைப்பேன், முழு உடலையும் நுழைப்பேன்... எனக்கு எல்லா உரிமையும் உண்டு”**

**“இடி ஒலியே எங்களை ஒன்றும் செய்யமுடியாது”**

– என்றெல்லாம் ஆளுநராக இருந்த போது இடி முழக்கம் செய்த தமிழிசை இப்போது இடியோசை கேட்ட நாகம் போல பெட்டிக்குள் அடங்கி பெருமூச்சு, மேல்மூச்சு, கீழ்மூச்செல்லாம் விட்டுக் கொண்டு, இருக்கிறாரே; என்பதைக் கண்டிடும்போது நமக்கு கலிங்கத்துப் பரணியில் வரும் பாடலில்,



**பொருதடக்கை வாளெங்கே?**
**மணிமார் பெங்கே?** – என
எழுதப்பட்ட வரிகளைப்போல
**‘இடிமுழக்கத்துக்கே அஞ்சேன்’ – எனக்**
**கடிதொச்சிய வாயெங்கே?**
**புலியை முறத்தால் அடித்து விரட்டும்**
**வலிமை கொண்ட நெஞ்செங்கே?**

– என்று நமது தமிழிசையைப் பார்த்து கேட்டிடத் தோன்றுகிறது!

**ஆம்; தமிழிசை, சந்திரபாபு நாயுடு பதவி ஏற்பில் சந்தித்த அவமானத்தைப் பார்த்து ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமுமே கோபப்பட்டது! கால்மேல் கால்போட்டு அமர்ந்திருந்த அமித்ஷாவுக்கு பணிவன்போடு வணக்கம் தெரிவித்து நகர்ந்த தமிழிசையை ‘சொடக்கு’ போட்டு அழைத்து, கண்களை மிரட்டிடும் தொனியில் விரித்து ஆட்காட்டி விரலை நீட்டி ‘தொலைத்துவிடுவேன்... தொலைத்து’ என்பதுபோல அங்குமிங்கும் அசைத்திட்ட காட்சிகள் வலைதளங்களில் பலவித அடிக்குறிப்பு களோடு வெளிவந்தன!**

செய்தியாளர்கள் மைக்கை கண்டு விட்டாலே, மனம் மகிழ்ந்து, பலூனைக் கண்டு சிறுகுழந்தை ஓடுவதுபோல ஓடி பேட்டி தரும் தமிழிசை அன்று மைக்கைக் கண்டதும் ஒரு செயற்கை புன்னகை சிந்தியவாறு மிரண்டு ஓடிய காட்சி பலரும் கண்ட ஒன்று!

‘சம்பவம் ஒன்று; அதற்கான யூகங்கள் பல’ என்ற நிலையில் வலைதளப் பதிவுகள் தமிழிசையை வறுத்தெடுக்கத் தொடங்கின.

**யூகம்: 1**

**அமித்ஷா:** ஏம்மா... ஒரு இடத்துல உட்கார மாட்டியா... மேடையிலே ஏறி அங்குமிங்கும் நடந்து உன் இருப்பைக் காட்டிக்கிட்டிருக்கியா?

**தமிழிசை:** அப்படியெல்லாம் இல்லை ஜீ...

**அமித்ஷா:** என்ன... இல்லை... நொல்லை... வாங்கின சீட்டுல நின்னு ஜெயிக்க வக்கில்ல... இப்போ ஏதோ ஜெயிச்சு கிழிச்சிட்டதுபோல தலையை நிமித்துகிட்டு இங்கும் அங்கும் நடக்குறியே... வெட்கமாயில்லை... இப்படியெல்லாம் நடந்தா உன்னை அரசியலிலிருந்தே தொலைச்சிப்புடுவேன்... ஜாக்கிரதை...

**தமிழிசை:** அய்யோ... அப்படியெல்லாம் எதுவும் செஞ்சிடாதீங்க ஜீ... நான் இனிமே உங்க கண்ணிலேயே படமாட்டேன்... (மேடையை விட்டு விரைகிறார்)

**யூகம்: 2**

**அமித்ஷா:** என்ன மேடம்... ஆந்திரா கவர்னர் ஆகும் ஆசையிலே சுத்துறியா?

**தமிழிசை:** எல்லாம் உங்க ஆசீர்வாதம்...

**அமித்ஷா:** புதுவை, தெலுங்கானா மாநிலத்தில் கவர்னராயிருந்து கிழிச்சது போதாதா? பாண்டிச்சேரி நாடாளுமன்றத் தேர்தலிலேயே காங்கிரசை ஜெயிக்க வைச்சுட்டே...! கூட்டணியிலிருந்த முதலமைச்சர் ரங்கசாமியை டம்மியாக்கி உன் ஆட்டத்தை எல்லாம் அங்கு ஆடி தாமரையை வளரவிடாது தரைமட்டமாக்கிட்டே...

**தமிழிசை:** அப்படி எல்லாம் இல்லை ஜீ...

**அமித்ஷா:** உன் விளக்கமெல்லாம் ஒன்றும் வேண்டாம்... கவர்னர், மந்திரி என்றெல்லாம் ஆசையை வளர்த்துகிட்டு அலையாதே... மீறி அலைஞ்சா தொலைச்சிடுவேன் தொலைச்சு...

**யூகம்: 3**

**அமித்ஷா:** என்னம்மா... மீண்டும் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவராக ஆசையா?

**தமிழிசை:** ஆமாங்க... இப்ப இருக்கிற ஆளு சரியில்லை... நான் வளர்த்து வைச்ச பா.ஜ.க.வை சுத்தமா தமிழ்நாட்டிலிருந்து தொடைச்சு எடுத்திட்டார்...



**சிலந்தி**

**அமித்ஷா:** ஆளாளுக்கு தமிழ்நாட்டிலே பா.ஜ.க.வை வளர்க்கிறேன்னு சொல்லிகிட்டு உங்களை வளர்த்துக்கிட்டீங்க... அங்க நீங்க அடிக்கிற கூத்தெல்லாம் எனக்குத் தெரியும்... இனிமேயாவது ஒழுங்கா இருங்க... இப்படி ஒருத்தருக்கு ஒருத்தர் மைக்கிடைச்சா அங்கே சென்று காலை வாரிக் கிட்டிருந்தா ஒட்டுமொத்தமா எல்லாரையும் ஒழிச்சிடுவேன்... ஜாக்கிரதை.

–இப்படி பல யூகங்கள் பல இடங்களிலிருந்து புற்றீசலாய் புறப்பட்டன. அமித்ஷா தந்த ‘ஷாக்’கிலிருந்து விடுபட்டு இரண்டு நாள் ஆனபின் அமித்ஷா என்ன கூறினார் என்பது குறித்து ஒரு வழவழ பதிவை தமிழிசை வெளியிட்டார். அவர் பதில் பதிவு ‘அமித்ஷாவின் ஒரு விரல் ஆட்ட ஆக்சனுக்கு சம்பந்தமில்லாத ஒன்றாக ‘வழவழ... கொழ கொழ’ – பாணியில் அமைந்திருந்தது!

**“2024 தேர்தலுக்குப் பிறகு முதன் முறையாக ஆந்திராவில் எங்கள் மாண்புமிகு உள்துறை அமைச்சர் ஸ்ரீ அமித்ஷாஜியை நேற்று நான் சந்தித்தபோது தேர்தலுக்குப் பிந்தைய நடவடிக்கை மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கேட்க அவர் என்னை அழைத்தார். நான் விரிவாகக் கூற முயன்றபோது நேரமின்மையால், அரசியல் மற்றும் தொகுதிப் பணிகளைத் தீவிரமாகச் செய்யுமாறு அவர் அறிவுறுத்தினார். இது தேவையற்ற யூகங்களைத் தெளிவுபடுத்தும்”** – என ‘கழுவிய மீனில் நழுவின மீன்’ பாணியில் சகோதரி ஓர் பதிவை வெளியிட்டார்.

இத்தகைய அறிவுறுத்தலுக்காக அமித்ஷா கண்களை உருட்டி, ஆள்காட்டி விரலை அங்கும் இங்கும் ஆட்டியது ஏன்?

அந்த வீடியோ’வைப் பார்த்தவர்கள் திருமதி. தமிழிசையின் விளக்கம் கேட்டு விலா நோக சிரிக்கத்தானே செய்தார்கள்! திருமதி தமிழிசையின் விளக்கத்தோடு அந்த நிகழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்களா? மறுநாள் அண்ணாமலை; அக்கா தமிழிசையை சந்தித்து அவரது சந்திப்பின்போது எடுத்த புகைப்படத்தையும் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

அக்கா தமிழிசையின் அரசியல் அனுபவமும் ஆலோசனைகளும் கட்சியின் வளர்ச்சிக்கான உத்வேகத்தை தொடர்ந்து அளித்துக் கொண்டிருக்கிறது என்று தம்பி அண்ணாமலை தனது பதிவில் பகர, “அன்புத் தம்பி அண்ணாமலையை சந்தித்ததில் மகிழ்ச்சி என்ற வார்த்தைகளோடு அந்தச் சந்திப்பின் விபரங்களை முடித்துக் கொண்டார்! “அப்பன் குதிருக்குள் இல்லை” என்ற பாணியில் அந்த அக்கா – தம்பி சந்திப்பு முடிந்துவிட்டது.

**அமித்ஷா அந்த மேடையில் நடந்து கொண்டது யாரும் ஏற்கக் கூடியதல்ல. அவரது ஆண்டான் மனப்பான்மையை காட்டியது என்றெல்லாம் விமர்சனங்கள் வெகுவாக எழுந்தன. ஒரு பெண்ணை அதுவும் இரு மாநில ஆளுநர் பதவியில் அங்கம் வகித்தவரை பொது மேடையில், பல பேர் முன்னிலையில் விரல்களால் சொடக்கு போட்டு அழைத்து – கண்களை உருட்டி, விரலை ஆட்டி எச்சரித்த அநாகரிகச் செயலை பலர் கண்டித்து தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ள நிலையில், அமித்ஷா தரப்பிலிருந்து எந்த விளக்கமுமில்லை.**

**அண்ணாமலை – தமிழிசை சந்திப்பு கூட வெறும் அக்காள் – தம்பி சந்திப்பு போல முடிந்ததாகத் தான் செய்திகள் வந்தன! அமித்ஷா சார்பில் அண்ணாமலை நடந்ததற்கு வருத்தம் தெரிவித்ததாகக் கூட தெரியவில்லை! அ.தி.மு.க.வின் செய்தி தொடர்பாளர் கூட அமித்ஷா அன்று தமிழிசையிடம் நடந்து கொண்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்!**



தனக்கு எதிராக எங்காவது ஒரு சிறு பொறி தென்பட்டாலும் கொதித்து மாய்ந்து மாய்ந்து பதிலளிக்கும் தமிழிசை வாயைத் திறக்கவே இல்லையே என்பது பலருக்கும் ஆச்சரியத்தை அளிக்கக்கூடியதுதான்!

மந்திரி பதவி, நாடாளுமன்ற மேலவைப் பதவி போன்றவைகளை வைத்திருந்த ஒன்றிய அமைச்சர் எல்.முருகன் நீலகிரியில் நின்று தேர்தலில் போட்டியிட்டு லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்ட பின்னும், மீண்டும் அவருக்கு அதே மந்திரி பதவி தந்துள்ளது. பா.ஜ.க.!

சட்டமன்ற உறுப்பினராக இருந்தும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோற்ற நயினார் நாகேந்திரனுக்கு எந்தவித இழப்பும் இல்லை!

தமிழ்நாடு பா.ஜ.க. தலைவராக இருந்து நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழ்நாட்டில் பொறுப்பேற்று நடத்தி போட்டியிட்ட தொகுதிகளிலெல்லாம் பா.ஜ.க. தோல்வியடைந்தும், அவரே போட்டியிட்டு தோற்றிருந்தும் மீண்டும் அதே தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் பொறுப்பில் இருக்கிறார் அண்ணாமலை!

**ஆனால் தெலுங்கானா – புதுச்சேரி ஆளுநர் பொறுப்பில் இருந்து, தன்னை விடுவித்துக் கொண்டு கட்சியின் கட்டளையை ஏற்று தேர்தலில் போட்டியிட்ட தமிழிசைக்கு மட்டும் மீண்டும் எந்தப் பொறுப்பும் தரப்படவில்லை என்பது அவருக்கு எத்தகைய மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கும் என்பதை உணர்கிறோம்! பதவி தரவில்லை என்றாலும் பரவாயில்லை, அமித்ஷா மேடையில் அழைத்ததும் “ஆகா... ஏதோ தனது பதவி குறித்து கூறப்போகிறார்” – என்று ஆவலோடு ஓடியவருக்கு கிடைத்தது அடுத்த பதவி குறித்த அறிவிப்பு அல்ல; அங்கத்தையே ஒடுங்க வைத்த அவமானம் என்பதை எப்படி அவரால் தாங்கிக் கொள்ள முடிகிறதோ!**

எல்லாமே பதவி படுத்தும் பாடு!